கலைக்கதிரில் தமிழியல் கட்டுரைகள்

— ஒரு வகைதொகை அடைவு

டாக்டர் கு. மோகனராசு

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
1983

கலைக்கதிரில் தமிழியல் கட்டுரைகள்

—ஒரு வகைதொகை அடைவு

டாக்டர் கு. மோகனராசு,
(பி. எசி., எம்.ஏ., பிஎச்.டி., உயர் சான்றிதழ்கள் :
மானிடவியல், புவியியல், உயர்கல்வியியல்,
சான்றிதழ்—சமசுகிருதம்)

விரிவுரையாளர்,
திருக்குறள் ஆய்வுமையம், தமிழிலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை-5.

சென்னைப் பல்கலைக்கழகம்
1983

© சென்னைப் பல்கலைக்கழகம், 1983

விலை ரூ. 10/-

அச்சிட்டோர்:
இரத்தினம் அச்சகம், சென்னை-600001

முன்னுரை

புற உலகினைப் பற்றிய தெளிவான அறிவினைப் பெற்று, இவ்வுலகில்—இவ்வுலகில் வாழும் பலகோடி உயிரினங்களுள் தன் 'இடம்' என்ன என்பதை ஒருவன் உணர வழி வகுப்பது அறிவியல். உலகில் வாழும் பல்வேறு மக்களின் பண்பாட்டு நெறிகளைத் தெளிந்து, சமுதாய அரங்கில் தன் 'இடம்' என்ன என்பதை ஒருவன் உணர வழி வகுப்பது கலையியல். அறிவியலும் கலையியலுமாகிய இரண்டும் ஒரு மனிதன் 'தன்'னை உணர்தற்கே வழிவகுக்கின்றன. தன்னை உணர்ந்தவனே உண்மையான அறிவுடையவன்—உண்மையான மனிதன். 'தன்'னை உணர வழிவகுக்கும் அறிவியலும் கலையியலும் அவனுடைய இருகண்கள். இதனாலன்றோ வள்ளுவம்,

> **எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
> **கண்ணென்ப வாழும் உயிர்க்கு** (குறள்-392)

எனத் துணிந்துரைக்கின்றது.

தமிழ் நாட்டில்—தமிழில் தோன்றிய இதழ்கள் பலவும் கலையியலுக்கு முதன்மை தந்து, அதனைப் பேணி வளர்த்தன, வளர்த்தும் வருகின்றன. அவைகள் தமிழனின் ஒரு கண்ணிற்குத்தான் ஒளியூட்டின; ஒளி ஊட்டியும் வருகின்றன. ஆனால், தமிழனின் இரு கண்களுக்கும் ஒளியூட்டிட, கடந்த முப்பத்து மூன்று ஆண்டுகளாக அயராது பாடுபட்டு வரும் ஒரே இதழ் கலைக்கதிர்தான் என்பதை உலகறியும். அயராத உழைப்பால் அதற்கு உயிரூட்டிப் பாராட்டிச் சீராட்டி வளர்த்து வருபவர் 'தொழிலுலகச் செம்மல்' எனத் தமிழுலகம் வியக்க வாழ்பவரும் சென்னைப் பல்கலைக்கழக மாண்புமிகு முந்நாள் துணைவேந்தருமாகிய ஜி. ஆர். தாமோதரன் அவர்களே ஆவார். தமிழ் உலகிற்குக் கலைக்கதிர் வழி அவர்கள் ஆற்றிவரும் தொண்டு அரியது-பெரியது. வணிக நோக்கில் முகிழ்த்த பல இதழ்களிடை அறிவு புகட்டும் ஒரே நோக்கில், அறிவியற் கருத்துகளை அள்ளி அள்ளித் தந்து, தமிழனைத் துள்ளி மகிழவைத்த ஒரே ஏடு கலைக்கதிர்தான்; உண்மை, வெறும் புகழ்ச்சி அன்று.

கலைக்கதிரின் முதல் ஏடு 1948-ஆம் ஆண்டு சனவரித்திங்கள் அன்று வெளியாகியது. இந்தியாவின் ஆன்மீக ஒளி (காந்தியடிகள்) மறைந்த திங்களில் அறிவியல் ஒளி (கலைக்கதிர்) தோன்றியது எனலாம்.

கலைக்கதிர் அறிவியலுக்கு முதன்மை தரும் நோக்கில் தொடங்கப் பட்டபோதும், தொடக்கத்தில் கலையியல் தொடர்பான கட்டுரைகளே மிகுதியும் இடம் பெற்றன; காலம் செல்லச் செல்ல அறிவியல் தொடர் பான கட்டுரைகள்—செய்திகள் முதன்மை இடம் பெற்றன; எனினும் கலையியலுக்கு என்றும் உரிய மதிப்பு அதில் உண்டு.

முப்பது மூன்று ஆண்டுகளாகக் கலைக்கதிரில் வெளிவந்துள்ள 579 கட்டுரைகள் இவ்வடைவில் வகை தொகை செய்யப்பட்டுள்ளன. இவ் வடைவு செய்ய என்னை 1974-ஆம் ஆண்டிலேயே ஆற்றுப்படுத்தியவர் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறைத்தலைவர் சிந்தனைச் செம்மல்' பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள்.

இவ்வடைவு ஆராய்ச்சி உலகிற்குப் பெரிதும் பயன்படும் என்னும் நோக்கில் இதனை வெளியிட முனைந்துள்ளேன். இந்த அடைவில் 1981 முடிய கலைக்கதிரில் வெளிவந்துள்ள தமிழியல் கட்டுரைகள், குறிப்புகள் ஆகியன மட்டுமே அடைவு செய்யப்பட்டுள்ளன.

ஆய்வுரை

கலைக்கதிர் வளர்த்த தமிழாய்வு

1. கலைக்கதிர்

காலத்தின் தேவை கருதி, அவ்வப்போது கருக்கொள்ளும் பல்துறை அறிவினை எளிய தமிழில் தெளிவாக-இனிமையாக-கற்போர் உளங்கொள எடுத்துரைத்துத் தமிழ்ப்பணி ஆற்றும் தனிப்பெரும் ஒப்பற்ற ஏடே கலைக்கதிர். இதனைப் **பல்துறைக் கருத்துக் கருவூலம்** எனவும், அகர நிரலில் அமையாத அரிய பெரிய **பல்துறைக் களஞ்சியம்** எனவும் போற்றுதல் சாலப் பொருந்தும்.

...நீயே தாயெனும் தன்மையின்
மேயபே ராசைஎம் மீக்கொள ஓர்வழி
உழைத்தலே கருதியென் றிழைத்தஇச் சிறுபணி
வெள்ளிய தெனினும் விளங்குநின் கணைக்காற்கு
ஒள்ளிய சிறுவிரல் அணியாகக் கொண்மதி
அன்பே குறியெனக் குறித்தே.

எனத் தமிழன்னையிடம் கலைக்கதிர் ஆசிரியர் முறையிடுவது அவருடைய பேரடக்கத்தின் எதிரொலியே; உண்மையில் **தமிழன்னையின் ஆரமெனத்** திகழும் பெரும்பேறு பெற்றது கலைக்கதிர் எனின், அது மிகையாகாது. தமிழ் வளர்ச்சிப் பாதையில் ஒரு பெரும் நம்பிக்கை ஒளியாகி வழிகாட்டுவது கலைக்கதிர் என்பது தமிழ் உலகம் ஏற்றுக்கொண்ட மறைக்க முடியாத-மறுக்க முடியாத உண்மை ஆகும்.

2. கலைக்கதிரின் தொடக்கம்

தமிழுக்கு வாய்ந்த ஆக்கக் கதிர்களுள் ஒன்றாக விளங்கும் கலைக்கதிர் 1948-ஆம் ஆண்டு மார்கழித் திங்கள் தோன்றியது. 1952-ஆம் ஆண்டு ஆடித்திங்கள் முடிய உள்ள 44 இதழ்களில் அட்டைகளிலும் முகப்புப் பக்கங்களிலும் தமிழ் ஆண்டுகள், திங்கள்களின் பெயர்கள் இடம்பெற்று உள்ளன. 45-வது இதழ், ஆவணி முதல் நாள் வெளிவருவதற்குப் பதிலாகச் செப்டம்பர் முதல் நாள்—அதாவது, 44-வது இதழ் வெளிவந்த 45-வது நாள் வெளிவந்துள்ளது. அவ்விதழில், வாசகர்களுக்கு, 'இனி, கலைக்கதிர் ஆங்கில மாதம் முதல் தேதியில் வெளிவரும்; இது செப்டம்பர் இதழ்; அடுத்த இதழ் அக்டோபர் முதல் தேதி வெளிவரும்' என்னும் அறிவிப்பு வெளிவந்துள்ளது. இந்தப் பதினைந்து நாள் கூடுதலினால், ஒவ்வோர் ஆண்டும் மார்கழித்திங்களில் தொடங்கிய இதழ், சனவரித்திங்களில் தொடங்கும் மாற்றம் பெற்றது; ஒவ்வோர் ஆண்டும் இரண்டாவது இதழாக வெளிவந்த பொங்கல் சிறப்பு இதழ், முதல் இதழ் ஆயிற்று.

பொங்கல் சிறப்பு இதழ், கலைக்கதிரின் தொடக்க இதழாக அமைய வேண்டும் என்னும் விழைவு, இத்தகைய மாற்றத்துக்கு அடிப்படைக் காரணமாக அமைந்திருத்தலும் கூடும். இத்தகைய மாற்றத்தினால், 1953-ஆம் ஆண்டு முதல் சனவரித் திங்களே கலைக்கதிரின் தொடக்கத் திங்களாக இருந்து வருகின்றது.

3. ஆசிரியர்

அறிவியல் புதுமைகளின் **பதிவேடாக-விரைவுப் பதிவேடாக** விளங்கும் கலைக்கதிர் தொடங்கியது முதல் சென்னைப் பல்கலைக் கழக முன்னாள் மாண்பமை துணைவேந்தராக வீற்றிருந்த தொழில்மேதை-அறிவியல் தமிழ் வளர்க்கும் அறிஞர்-பேராசிரியர் **டாக்டர் ஜி. ஆர். தாமோதரன்** அவர்களே ஆசிரியராக இருந்து வந்து உள்ளார். அவர் துணைவேந்தரானதிலிருந்து கலைக்கதிரின் மதிப்பியல் ஆசிரியராக இருந்து வந்தார். பிறகு பி. எஸ். ஜி. அறநிலைய நிர்வாக அறங்காவலர் திரு. ஜி. வரதராஜ் அவர்கள் ஆசிரியராக இருந்து வந்தார். கலைக்கதிர் உருவாகிச் செம்மையான முறையிலே தமிழ்த்தொண்டு ஆற்றுவதற்கு வினை ஊக்கிகளாக இருந்து உதவிய பேராசிரியப் பெருமக்கள் பலர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் திரு. போ. ரா. கிருஷ்ணமூர்த்தி, டாக்டர் தெ. பொ. மீ., டாக்டர் மு.வ., திரு. அ. ச. ஞானசம்பந்தம், டாக்டர் தா. ஏ. ஞானமூர்த்தி, டாக்டர் ம. ரா. போ. குருசாமி ஆகியோர் ஆவர்.

4. நோக்கம்

வளரும் குழந்தைகளுக்குப் பசும்பாலினும் தாய்ப்பாலே எல்லா வகையினும் சிறந்தது எனக் கருதும் உண்மையான தாய்மை உணர்வும், 'சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே' எனக் கருதும் உண்மையான தந்தைமை உணர்வும் 'தாமின் புறுவ துலகின் புறக்கண்டு, காமுறுவர் கற்றறிந் தார்' என்னும் வள்ளுவ உள்ளமும் ஒரு சேரக் கொண்ட ஒரு பெரும் தமிழ் நெஞ்சத்தின் உயிர்த் துடிப்பே-துடிப்பு இழையோடிய பதிவுகளே கலைக்கதிர் என்பதை அதன் நோக்கையும் போக்கையும் தோற்றத்தையும் ஏற்றத்தையும் அறியவல்லார் மிகத் தெளிவாக உணர்வர். 'தமிழ் வாழ்க! தமிழ் வளர்க!!' என்னும் வெற்றொலி ஆரவாரங்களினும், அமைதியான ஆக்கத் திறமான பணிகளால்தான் தமிழை வாழ்விக்க—வளர்விக்க முடியும் என்னும் ஆணித்தரமான நம்பிக்கையும், அதற்குச் செயல் வடிவு தரும் உள்ள உறுதியும் கொண்டவர் கலைக்கதிர் ஆசிரியர்.

'சென்றிடுவீர் எட்டுத் திக்கும்-கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்' என்னும் பாரதியாரின் கட்டளையைத் தலைமேற்கொண்டு, 'தமிழினத்துக்கு வேண்டிய பொருள் எங்கே இருந்தாலும் அதனைக் கொண்டு வந்து சேர்க்கும் அரும் பணியைக் 'கலைக்கதிர்' ஆற்றும் என்பது உறுதி, (கலைக்கதிர், மலர்-க, இதழ்-க,) என்னும் உறுதியுடனே கலைக்கதிரை ஆசிரியர் தொடங்குகின்றார்.

பல்கலை அறிவை—சிறப்பாக, நாள்தோறும் வளர்ந்து வரும் அறிவியல் அறிவை எளிய இனிய தமிழில் பெற்றுத் தெளிந்து, தமிழ் இனம் விழிப்புற வேண்டும்; தமிழ் ஆக்கம் பெற வேண்டும் என்னும் விழுமிய நோக்கோடே கலைக்கதிர் தோன்றியது; இன்றளவும் அதன் அடிப்படை நோக்கில் எவ்வித மாறுபாடும் இல்லை; எனினும் நோக்கத்தை வெளிப்படுத்தும் நிலையில் காலத்துக்குக் காலம் ஒரு சில நுட்ப வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஆசிரியரின் பின்வரும் கூற்றுகளே இதற்குச் சான்றுகளாகும்:

> "தற்காலத்துக்கு வேண்டிய விஞ்ஞானம், பொறியியல், பொருளாதாரம், இலக்கியம், வரலாறு ஆகிய இவை பற்றிய அறிவினைத் தமிழ்நாட்டில் வளரச் செய்வதாகிய சிறந்த தொண்டினை மேற்கொண்டு 'கலைக்கதிர்' உதயமாகிறது" (1:1)

> "அறிவியல் புதுமைகளைத் தமிழ் மக்களுக்கு எளிய தமிழில் விளக்குவதே கலைக்கதிரின் சிறப்பான நோக்கமாகும்" (18:1)

> "அறிவியல் தொழில் நுட்பக்கலை பற்றிய கருத்துகளைப் பரப்புவதற்கென்றே உருவெடுத்த மாத இதழ் கலைக்கதிர்" (30:3)

நோக்கங்களில் காணும் நுட்ப வேறுபாடுகளுக்குத் தக்கவாறு கலைக்கதிரில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளின் போக்கும் மாற்றம் பெற்றுள்ளது என்பது கருதத்தக்கது.

5. ஆய்வின் எல்லை

'**கலைக்கதிர் வளர்த்த தமிழாய்வு**' என்னும் தலைப்பில் தமிழில் வந்துள்ள பல்துறை ஆய்வுக் கட்டுரைகளை ஆய்வது என்பது முழுமையான ஆய்வு; தமிழ் இலக்கியம்-மொழி தொடர்பாக வந்துள்ள ஆய்வுகளை ஆய்வது என்பது அதில் ஒருகூறு. முழு அளவினதான ஆய்வு பல்வேறு கிளைகளாகப் பிரிந்து தனித்தனி டாக்டர் பட்ட ஆய்வுகளாக வெளிவருதற்குரிய விரிந்து பரந்த எல்லை பரப்புகளை உடையது. இக்கட்டுரையில் தமிழ் இலக்கியம், மொழி தொடர்பாக வந்துள்ள ஆய்வுகள் மட்டுமே கருக்களாகக் கொள்ளப்பட்டன. (இவற்றுள் முப்பது ஆண்டுகளில் வெளிவந்துள்ள தமிழாய்வுக் கட்டுரைகள் மட்டுமே ஆய்வுக்குக் கொள்ளப்பட்டுள்ளன. பொங்கல் சிறப்பு மலர்களுள் தனியாக வந்தவை ஆய்வில் சேரவில்லை.)

6. தமிழ் உணர்வு

கலைக்கதிர் ஆசிரியரின் நோக்கம் என்னும் குருதியிலே சிவப்பு அணுக்களாக விளங்குவன தமிழ் உணர்வே; இதனை, ஆய்வுலகம்-தமிழ் உலகம் நன்கு உணர முடியும். ஆசிரியரின் தமிழ் உணர்வுக்குப் பல்வேறு சான்றுகளைத் தர முடியும் என்றாலும், சுருக்கம் கருதி ஒரு சில சான்றுகளே இங்குத் தரப்படுகின்றன. கலைக்கதிரின் முதல் இதழே தமிழ் மணம் கமழத் தொடங்குகின்றது. தொடக்க இதழ் அட்டையில் 'கலைக்கதிர் மாத வெளியீடு-சர்வதாரி மலர்:க மார்கழி இதழ்:க' எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. தமிழ் வழக்கில் உள்ள ஆண்டின் பெயரும் தமிழ்த் திங்களின்

பெயரும் தமிழ் எண்களும் இடம் பெற்றுள்ளமை கருதத்தக்கதாகும். முகப்புப் பக்கத்திலும்கூட ஆங்கிலத் திங்களின் பெயர் இடம் பெற வில்லை (இந்நிலை முதல் 44 இதழ்களில் நீடித்துள்ளது). கலைக்கதிர் இதழைத் தம் தந்தைக்குக் காணிக்கை ஆக்கும் ஆசிரியர், முதல் இதழினை,

கல்வியறி வெங்கும் கமழுதினைத் தெமக்கு
நல்லவழி காட்டி நலம்பலவும் —பல்லோர்க்கும்
ஆக்கினார் எந்தை அவர்தமக்காம் காணிக்கை
ஆக்கினோம் இந்நூல் தனை

என்னும் படையல் பாவுடன் தொடங்குகின்றார்.

முதல் இதழின் முகப்புப் பக்கம் மகாகவி பாரதியாரின் கட்டளையுடன் தொடங்குகிறது; அடுத்து, நாமக்கல் கவிஞர் அவர்களின் வாழ்த்துப்பா; அதனை அடுத்து டாக்டர் மு. வ. அவர்களின் நல்ல நூல் என்னும் கட்டுரை. கலைக்கதிரின் அட்டைப் படங்களிலும் உள்ளேயும் தமிழறிஞர், புலவர், அரசியல் தலைவர் முதலிய பெருமக்களின் வண்ண ஓவியங்களும் புகைப் படங்களும் பல வெளிவந்துள்ளன. தமிழ் இலக்கியக் காட்சிகள் பல, அட்டையிலும் உள்ளேயும் வண்ண ஓவியங்களாக இடம் பெற்று உள்ளன. நற்றிணையில் வரும் 33 பாடல்களுக்கு 33 முழுப் பக்க வண்ண ஓவியங்கள் கலைக்கதிரில் தொடர்ந்து வெளிவந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்க தாகும். சிறப்பு மலர்களில், சித்திரச் சிலம்பு, சூளாமணிக் காட்சிகள், சிந்தாமணிக் காட்சிகள் என அவ்வக் காப்பியங்களில் இடம்பெறும் இன்றி யமையாக் காட்சிகள் தொகுப்பு, வண்ண ஓவியங்களாக இடம் பெற்று உள்ளன. இத்தகைய அரும் பெரும்பணியை-பொருள் இழப்பையும் கருதாத செந்தமிழ்ப் பணியைத் தமிழ் இலக்கண இலக்கிய ஆய்வுக்கென்றே தோன்றிய இதழ்களும் இதுவரை செய்ததில்லை என்பது வெள்ளிடைமலை.

ஆண்டுதோறும் பொங்கல் சிறப்பு மலர்கள் வெளிவந்துள்ளன; இவற் றொடு, வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுச் சிறப்பு மலரும், தமிழ்மொழியே பயிற்றுமொழியாக அமைய வேண்டும் என்னும் நோக்கில் பயிற்று மொழிச் சிறப்பு மலரும் வெளிவந்துள்ளன.

அடிசிற்கினியாள், கானல்வரி, சமணத் தமிழ் இலக்கிய வரலாறு, குலசேகரர், தெ. பொ. மீ. மணி விழா மலர், A Critical Study of Civakasinthamani என்னும் நூல்கள் கலைக்கதிர் வெளியீடுகளாக வெளி வந்துள்ளன. தமிழில் அறிவியல் கலைச் சொற்களை உருவாக்க வேண்டும் என்னும் உயர்ந்த நோக்கில், வேதியியல் கலைச்சொற்கள் தொகுதியும், இயற்பியல் கலைச்சொற்கள் தொகுதியும் கலைக்கதிர் வாயிலாக வெளி வந்துள்ளன. அறிவியல் தமிழாக்க மாநாடுகள் இரண்டினைக் கலைக் கதிர் நடத்தி, இரு சிறப்பு இதழ்களையும் வெளியிட்டு உள்ளது.

தமிழ் அறிஞர்களுக்கும் புலவர்களுக்கும் நடைபெறும் மணிவிழா முதலிய சிறப்பு நிகழ்ச்சிகளையும், இறப்பு முதலிய இரங்கல் நிகழ்ச்சி களையும் அவர்களின் சிறப்புப் பணிகளோடு தக்கவாறு வெளியிட்டுக் கலைக்கதிர் தொண்டாற்றி வருகிறது. புதுமைப்பித்தன் அவர்கள் இறந்தபோது, வறுமையில் வாடிய அவருடைய குடும்பத்தாருக்கு நிதி திரட்டும் பணியில் கலைக்கதிர் ஈடுபட்டது குறிப்பிடத்தக்கதொரு செய்தி.

கலைக்கதிரில் வெளிவந்துள்ள பல்துறைக் கட்டுரைகளிலும் பெரும்பாலான வற்றில் தமிழ் இலக்கியக் கருத்துக்கள்-பாடல்கள் ஊடே இடம் பெற்று உள்ளன.

இவ்வாறு பல்வகையிலும் இழையோடி நின்ற தமிழ்உணர்வு கலைக் கதிரில் தமிழ் இலக்கியம் மொழி தொடர்பான ஆய்வுகள் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றதற்கு அடிப்படைக்காரணம் எனலாம்.

7. படைப்பிலக்கியங்களும் தமிழியல் கட்டுரைகளும்

கலைக்கதிரில் 30 ஆண்டுகளில் வெளிவந்துள்ள படைப்பிலக்கியங்கள் தமிழியல் கட்டுரைகள் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த மொத்த எண்ணிக்கை வருமாறு :

1948 — 1958 = 660
1959 — 1968 = 354
1969 — 1978 = 248

இவற்றுள், ஒவ்வொரு படைப்பிலக்கிய வகையும் தமிழியல் கட்டுரை களும் பெற்றுள்ள விழுக்காட்டு விவர வரைபடம் வருமாறு :

கலைக்கதிரில் படைப்பிலக்கியங்களும் தமிழியல் கட்டுரைகளும்



(படம் : 1)

இங்குக் குறிப்பிடத்தக்க ஒன்று, படைப்பிலக்கியங்களினும் தமிழ் இயல் கட்டுரைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு பத்தாண்டிலும் கூடி உள்ளது என்பதே.

8. தமிழியல் கட்டுரைகள்

8.1 *தமிழியல் கட்டுரைகளுள் தமிழ் ஆய்வுக் கட்டுரைகளும் சிறப்பும் பெற்றுள்ள இடம் வருமாறு :*

தமிழியல் கட்டுரைகள்- தமிழ் ஆய்வுக்கட்டுரைகள்



※ தமிழ் அறிஞர்- புலவர் பற்றிய குறிப்புகள்

(படம் : 2)

தமிழியல் கட்டுரைகளுள் தமிழ் ஆய்வுக் கட்டுரைகளுக்கே முதன்மை இடம் தந்துள்ளமை மேற்காட்டிய விளக்கப்படத்தால் புலனாகும். மொத்தத்தில், 30 ஆண்டுகளில் வெளிவந்த 359 இதழ்களில் (1973 ஜுன் இதழ் வரவில்லை) 45 இலக்கியத் திறன் ஆய்வுக் கட்டுரைகளும், 67 வரலாறு பண்பாடு பற்றிய கட்டுரைகளும், 86 மொழியியல்-சொல்லாக்கக் கட்டுரை களும், 20 இலக்கிய வரலாற்றுக் கட்டுரைகளும், 165 தனி இலக்கிய ஆய்வு களும் வெளிவந்துள்ளன. அன்றியும் சிலப்பதிகாரச் செய்யுள், கம்பனும் வால்மீகி வாய்மையும், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, தொல் காப்பிய நெறி ஆகிய தொடர் ஆய்வுக் கட்டுரைகளும் வெளிவந்துள்ளன.

9. கூடுதலும் குறைவும்

கலைக்கதிரில் ஒவ்வோர் ஆண்டும் வெளிவந்துள்ள தமிழாய்வுக் கட்டுரைகளின் எண்ணிக்கைகளை நோக்கின், ஒரே ஆண்டில் 45 கட்டுரைகள் (முதல் ஆண்டு) வந்துள்ளதையும் காணுகின்றோம்; ஒரு கட்டுரையும் வராததையும் (19, 22-வது ஆண்டுகள்) காணுகின்றோம்; தமிழாய்வுக் கட்டுரைகளின் எண்ணிக்கை ஒரே சீராக இல்லாமையையும் தெளிவாகக் காணுகின்றோம். தமிழாய்வுக் கட்டுரைகளின் எண்ணிக்கை அடிப்படையில் கலைக்கதிரின் முதல் பதினான்கு ஆண்டுகளை ஒரு காலக்கட்டமாகவும் அடுத்த பதினாறு ஆண்டுகளை மற்றொரு காலக்கட்டமாகவும், பிரிக்கலாமோ என எண்ணத் தோன்றுகிறது; எனினும், சில விதிவிலக்குகளும் (21, 26, 28-ஆம் ஆண்டுகள்) உண்டு. இனி, தமிழாய்வுக் கட்டுரைகளின் கூடுதல் குறைதல்களுக்கான காரணங்களைக் காண்போம்:


கலைக்கதிரில் தமிழாய்வுக் கட்டுரைகள்
X. அச்சில் 1 செ.மீ. = 2 ஆண்டுகள்
Y. அச்சில் 1 செ.மீ. = 2 கட்டுரைகள்
மலர் (ஆண்டு) எண்

வளர்ந்து வரும் அறிவியல், பொருளியல், உளவியல் முதலாய பல் துறை அறிவைத் தமிழில் தரமுடியுமா எனத் தமிழகம் பெரிதும் குழம்பிக் கொண்டிருந்த காலக்கட்டத்தில்-அறிவியல் அறிவோடு ஆங்கிலம் தமிழ் ஆகிய இருமொழிகளிலும் புலமை பெற்று இருந்தவர்களும் தமிழில் அறிவியல் கருத்துகளை மொழிபெயர்த்துத் தர அஞ்சிய காலக்கட்டத்தில் ஒரு நம்பிக்கை ஒளியாகத் தோன்றியது கலைக்கதிர். கலைக்கதிர் தோன்றி வளர்வதற்கு வித்திட்டவர்களுள் பெரும்பான்மையோர் தமிழ்ப் பேரறிஞர்கள். கலை ஆர்வம் வேரூன்றி நிற்கும் தமிழ்மண்ணில், அறிவியல் சிந்தனைகளை முழுவதுமாகக் கொண்ட ஓர் இதழுக்கு வரவேற்பு இருக்குமா என்ற அச்சம் எழுவது இயற்கையாதலால், படிப்படியாகவே அறிவியல் சிந்தனைகளை ஊட்டவேண்டும் என்னும் சூழல்! ஓரளவு இத் தகைய காரணங்களால் முதலிரண்டு ஆண்டுக் கலைக்கதிர்களில் தமிழ் ஆய்வுத் தொடர்பான கட்டுரைகள் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளன எனலாம்.

மேலும், மேலை நாடுகளில் இலக்கியத் திறன், இலக்கிய மரபு ஆகிய வற்றில் தோன்றிய விழிப்புணர்வு தமிழ்மண்ணில் தாக்கத்தை ஏற்படுத்திய போது, கலைக்கதிர் அதற்கு உண்மையான வரவேற்பை நல்கி உள்ளது. டாக்டர் மு. வ., அ. ச. ஞானசம்பந்தம் ஆகியோர் தொடர்ந்து இத் துறைகளில் கட்டுரைகள் எழுதி வந்துள்ளனர். முதலிரண்டு ஆண்டுகளில் வெளிவந்த தமிழாய்வுக் கட்டுரைகள் 83-இல் 33 கட்டுரைகள் (ஏறத்தாழ 40%) இலக்கியத் திறன்-இலக்கிய மரபு பற்றியவை என்பது குறிப்பிடத்தக்கது ஆகும். சிலப்பதிகாரச் செய்யுள், கம்பன் புளுகும் வால்மீகி வாய்மையும் என்னும் தொடர் ஆய்வுக் கட்டுரைகள் முதலிரண்டு ஆண்டுகளில் தொடர்ந்து வெளிவந்துள்ளதும் (வரைபடத்தில் தொடர் கட்டுரையின் ஒவ்வொரு தொடரும் ஒரு தனி ஆய்வுக் கட்டுரை என்னும் அளவில் கொள்ளப்பட்டுள்ளது) கட்டுரைகளின் எண்ணிக்கை கூடுவதற்கு ஒரு வகையில் காரணமாயின எனலாம். முதலிரண்டு ஆண்டுகளில் எண்ணிக்கை அளவில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றிருந்த தமிழாய்வுக் கட்டுரைகள் 3, 4, 5, 6-ஆம் ஆண்டுகளில் எண்ணிக்கை அளவில் குறைந்து உள்ளன. இதற்கான காரணங்கள் பின்வருவனவாகலாம்.

1. இலக்கிய மரபு-இலக்கியத்திறன் தொடர்பான கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிட்டு வந்த டாக்டர் மு. வ., அ. ச. ஞானசம்பந்தம் ஆகியோர், அவற்றை நிறுத்தி விட்டு, அவ்வப்போது சங்க இலக்கியம் தொடர்பான ஆய்வுகளை வெளியிடுவதில் ஈடுபட்டமை.

2. டாக்டர் மு. வ. அவர்கள் சமுதாயச் சிந்தனைகளை அடிப் படைகளாகக் கொண்ட சிறுகதைகளை எழுதுவதிலும், சங்க இலக்கியப் பாடல்களுக்கு விளக்கங்கள் தருவதிலும் தம் பார்வையைச் செலுத்தியமை.

3. சமய, சமுதாய, மொழியியல் தொடர்பான பொதுக்கட்டுரைகள் முன்னிரண்டு இதழ்களினும் இவற்றில் கூடுதலான இடத்தைப் பெற்றமை.

4. பொங்கல் சிறப்பு மலர்களில் கவிதைகளும் சிறுகதைகளும் சிறப்பிடம் பெற்றமை. (4-ஆம் ஆண்டுப் பொங்கல் மலரில் மட்டும் 7 கவிதைகளும் 5 சிறுகதைகளும் இடம் பெற்றுள்ளன).

மொழியியல் தொடர்பான கட்டுரைகள், (ஒன்பதாவது ஆண்டின் 8-வது இதழ் சுதந்திரப் போராட்டச் சிறப்பு இதழாக அமைந்து, அதில் வெளிவந்த) வரலாற்று ஆய்வுக் கட்டுரைகள், பொங்கல் சிறப்பு இதழ்களில் தமிழ் ஆய்வுக் கட்டுரைகள் பெற்ற சிறப்பிடம், டாக்டர் மு. வ. அவர்களின் 'பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை' என்னும் தொடர் ஆய்வுக் கட்டுரை ஆகியவற்றால் 7, 8, 9-ஆம் ஆண்டுகளில் தமிழ் ஆய்வுக் கட்டுரைகளின் எண்ணிக்கை ஓரளவுக் கூடுதலாயிற்று.

அறிவியல், கலையியல் ஆகியவற்றில்-சிறப்பாக அறிவியலில்-உள்ள பல்வேறு துறைகளுக்கும் உரிய இடம் தர முனைந்து, ஒவ்வொரு துறைக்கும் ஒன்று (அல்லது சில வேளைகளில் இரண்டு) எனப் பிரித்து, கட்டுரைகளைக் கலைக்கதிர் வெளியிடத் தொடங்கியது. இது 15-ஆம் ஆண்டு முதல் தமிழாய்வுக் கட்டுரைகளின் எண்ணிக்கை குறைவதற்கு அடிப்படைக் காரணம் ஆயிற்று எனலாம்.

மேலும், அறிவியல் அறிஞர்கள், உள்ளத்தின் உண்மை, சிறுவர் அரங்கு, தொழில் நுணுக்கங்கள், பணத்தின் கதை, பொது அறிவுப்புதிர், வரலாறும் வளர்ச்சியும், வானவெளி ஆய்வு, விஞ்ஞானப் புதுமைகள் முதலிய பல்துறைத் தொடர்களும், சீவகசிந்தாமணி, காமக்கண்ணி, அமரா பாணம், பரிசுச் சிறுகதைகள், பரிசுக்கட்டுரைகள் ஆகியவைகளும் தொடர்ந்து இடம் பெற்றுள்ளதும் தமிழாய்வுக் கட்டுரைகளின் எண்ணிக்கை குறைவிற்குப் பேரளவுக் காரணமாகியுள்ளன. பொதுவாக, அறிவியல் சிந்தனைகளைத் தமிழ் மக்களுக்கு எளிய இனிய தமிழில் தரவேண்டும் என்னும் நோக்கின் பெரும் பகுதியை இக்காலக் கட்டத்தில் கலைக்கதிர் அடைகின்றது. இவற்றுள், குறிப்பாக 19-ஆம் ஆண்டு, 22-ஆம் ஆண்டு ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் தமிழாய்வுக் கட்டுரைகள் இடம் பெறாமைக்குப் பின்வரும் காரணங்கள் கூறலாம்:

1. அறிவியல் மேதைகள் வாழ்க்கை வரலாறு, அறிவியல் விந்தைகள் (விஞ்ஞானப் புதுமைகள்), அறிவியல் வினா விடை, இன்றைய அறிவியல், சிறுவர் அறிவியல் அரங்கு (சிறுவர் அரங்கு), தொழில் நுணுக்கங்கள், விஞ்ஞான ஆராய்ச்சி முதலிய பல்வேறு தொடர்கள் வெளிவந்தமை.

2. சுதந்திர பாரதம் என்னும் இந்திய வரலாற்றுத் தொடர் தொடர்ந்து வெளிவந்தமை.

3. கற்பென்னும் தீபம், நற்றிணை இன்பம், மூதிரமலைச் செல்வி முதலிய தொடர்கள் வெளிவந்தமை.

4. அறிவியல் வளர்ச்சி மலர் (19:8), பொறியியல் மாணவர் மலர் (22.4), பொருளாதாரச் சிறப்பு மலர் (22:11) ஆகியவை வெளிவந்தமை.

வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுச் சிறப்பு மலரைக் கலைக்கதிர் 1969-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்களில் வெளியிட்டுள்ளது. இம்மலரில் மட்டும் 16 தமிழாய்வுக் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இதுவே 21-ஆம் ஆண்டில் தமிழாய்வுக் கட்டுரைகளின் எண்ணிக்கைக் கூடுதலுக்கு அடிப் படைக் காரணம் ஆயிற்று.

முதல் அறிவியல் தமிழாக்கக் கருத்தரங்கை 1973 டிசம்பர்த் திங்களிலும், அறிவியல் தமிழாக்க இரண்டாம் கருத்தரங்கை இரண்டாண்டுகள் கழித்தும் கலைக்கதிர் நடத்தி உள்ளது. அவற்றைத் தொடர்ந்து கருத் தரங்கச் சிறப்பு மலர்கள் முறையே பிப்பிரவரி 74-லும், பிப்பிரவரி 76-லும் வெளிவந்துள்ளன. கருத்தரங்குகளில் படிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளும் பிறவும் தொடர்ந்து வெளிவந்துள்ளன. இக்காரணங்களால், 26, 28 ஆம் ஆண்டு இதழ்களில் தமிழாய்வுக் கட்டுரைகளின் எண்ணிக்கை கூடுதல் பெற்று உள்ளது.

தற்போது வரும் கலைக்கதிர்களில், தமிழ் இலக்கியம்-மொழி தொடர் பான கட்டுரைகளுள் அறிவியல் தொடர்பான கட்டுரைகளே முதன்மை இடம் பெறுகின்றன; எண்ணிக்கை அளவில் குறையினும் கட்டுரைகள் எண்ணத்தின் அளவில் கூடியே செல்கின்றன.

விரைந்து வளர்ந்து வரும் அறிவியல் சிந்தனைகளை அப்போதைக்கப் போது தமிழ்மக்கள் தம் தாய் மொழியிலேயே அறிந்து கொள்ளுமாறு செய்தல் வேண்டும் என்னும் அடிப்படையில் மூகிழ்த்த கலைக்கதிர், தமிழ் மொழி-இலக்கியம் தொடர்பான ஆய்வுகளுக்கும் தக்க இடம் தந்து சிறப்பித் துள்ளது. கலைக்கதிர் தன் அடிப்படை நோக்கை நோக்கிப் படிப்படியாக நடையிட, நடையிட அதில் தமிழ் மொழி-இலக்கியம் தொடர்பான ஆய்வு களின் எண்ணிக்கை பெரும்பான்மையும் குறைந்து கொண்டே வந்துள்ளது; விதிவிலக்குகளும் உண்டு; விதிவிலக்குகளுக்கு அடிப்படைக்காரணங்கள் தமிழ் வளர்ச்சி கருதி—தமிழின் பெருமையை வெளிப்படுத்தும் நோக்கில் வெளி வந்துள்ள சிறப்பு மலர்களே.

இலக்கியக் கொள்கை, இலக்கியத் திறனாய்வு போன்றவற்றில் தமிழ் அறிஞர்கள் தம் பார்வையைச் செலுத்திய தொடக்க காலத்தில் அவற்றிற்குப் பெரும் வரவேற்பு நல்கியது கலைக்கதிர்; பின்னர், மொழியியல் சிந்தனைகள் வளர்ச்சி பெறத் தொடங்கியதும் அம்மொழியியல் தொடர்பான ஆய்வு களுக்கு முதன்மையிடம் தந்துள்ளது; தமிழ் ஆக்கத்திற்குக் கலைச்சொற் படைப்பின் இன்றியமையாமை உணரப்பட்டபோது அதற்குப் பேராதரவு தந்துள்ளது; இவ்வகையில் காலமறிந்து தமிழ்ப்பணி ஆற்றும் கலைக் கதிருக்கு ஈடாக வேறோர் இதழைக் கூற முடியுமா என்பது ஐயமே.

'கலைக்கதிரின் நோக்கம், பயன்மிக்க கருத்துக்களைக் காலத்திற்கு ஏற்ப வெளியிட்டுத் தமிழ்ப்பணி புரிவதுதான்' (2:2) என்னும் ஆசிரியர் கூற்றின் உண்மை இவற்றாலும் புலனாகும்.

(நன்றி: கலைக்கதிர்)

I. இலக்கியங்கள்

1. 1 தொல்காப்பியம்

வரிசை எண்	கட்டுரைத் தலைப்பு	ஆசிரியர் பெயர்	மலர் எண்	இதழ் எண்	பக்கம் / பக்கங்கள்
1	களவியற் காட்சிகள்	‘அலர்’	5	1	62-67
2	ஙனமா ? அனமா ?	முத்துச்சண்முகம்	13	11	37-40
3	தத்துவ விளக்கம்	புருஷோத்தம நாயுடு, பி. ஆர்.	9	8	18-22
4	தொல்காப்பிய நெறி	துரையரங்கனார், டாக்டர்	12	1	30-34
	,,	,,	,,	3	44-51
	,,	,,	,,	4	17-20
	,,	,,	,,	5	12-17
	,,	,,	,,	6	43-47
	,,	,,	,,	7	22-25
	,,	,,	,,	8	51-54
	,,	,,	,,	9	25-29
	,,	,,	,,	10	45-50
	,,	,,	,,	11	47-52
	,,	,,	,,	12	27-32
	,,	,,	13	2	45-51
	,,	,,	,,	3	63-67
	,,	,,	,,	4	25-28
	,,	,,	,,	5	53-58
	,,	,,	,,	6	10-14
	,,	,,	,,	7	17-22

வரிசை எண்	கட்டுரைத் தலைப்பு	ஆசிரியர் பெயர்	மலர் எண்	இதழ் எண்	பக்கம் / பக்கங்கள்
(4)	தொல்காப்பிய நெறி	துரையரங்கனார், டாக்டர்	13	8	9-13
	,,	,,	,,	9	47-53
	,,	,,	,,	10	26-30
	,,	,,	,,	11	21-27
	,,	,,	,,	12	42-46
	,,	,,	14	1	22-28
	,,	,,	,,	2	55-59
	,,	,,	,,	3	42-46
	,,	,,	,,	4	54-58
	,,	,,	,,	5	17-22
	,,	,,	,,	6	21-27
	,,	,,	,,	7	41-47
	,,	,,	,,	8	47-52
	,,	,,	,,	9	17-23
	,,	,,	14	10	39-43
	,,	,,	,,	11	26-32
5	தொல்காப்பியம் கூறும் அடியோர்-வினைவலர்	கோதில் மொழியன், சின்.	34	1	55-63
6	தொன்றும் தொண்டும் ஒன்று ஆகும்	மகாதேவன், கொண்டல் சு.	27	8	61-66
7	பயிற்று முறை	துரையரங்கனார், டாக்டர்	9	1	30-40
8	மானமும் கள்ளும்	துரையரங்கசாமி, மொ. அ.	7	2	37-42
9	வற்றென் சாரியை	முத்துச்சண்முகம்	12	12	62-64

வரிசை எண்	கட்டுரைத் தலைப்பு	ஆசிரியர் பெயர்	மலர் எண்	இதழ் எண்	பக்கம் / பக்கங்கள்
10	அகப்பொருளில் தோழி	ஞானமூர்த்தி, தா. ஏ.	13	2	56-60
11	அடிசிற்கினியாள்	,,	9	11	92-93
12	அடியளந்தான்	கிருஷ்ணசாமி நாயுடு, பண்டிதர் அ.	2	3	50-55
13	அந்தாள்	செயராமன், வித்துவான் வெ.	1	,,	23-26
14	அரசரும் புலவரும்	சிவஞான கிராமணியார், ம. பொ.	2	2	13-16
15	அன்பின் வெற்றி	மு. வ., டாக்டர்	5	9	26-27
16	அன்றைக்கும் இப்படித்தானா ?	துரை அரங்கசாமி	15	4	55-62
	,,	துரையரங்கனார், டாக்டர்	,,	5	17-24
17	ஆவண ஓலை	ஜகந்நாதன், கி. வா.	10	1	89-93
18	இல்லற நெறி	இருசு	32	11	25-27
19	இலக்கியத்தில் நீராடல்	சேதுமாதவன், ச.	24	3	37-42
20	இலக்கியம் வளர்த்த மகளிர்	இராச இராசேசுவரி, பு. பா.	27	11	97-106
21	இலக்கிய மரபுகள்	ஞானசம்பந்தம், அ. ச.	2	1	13-17
22	இன்கலைப் படைப்பின் இனிய அறிவுழைப்பு	மீனாட்சி சுந்தரனார், டாக்டர்	,,	2	183-187
23	உயிரும் உடம்பும்	வரதராசனார், டாக்டர் மு.	,,	8	23-26
24	உலக அரங்கில் தமிழ் ஆராய்ச்சி	கெல்லர், கார்ல் ஏ.	18	7	10-13
	,,	,,	,,	8	9-11
	,,	,,	,,	9	49-52
25	உவகையின் உச்சி	மணிவண்ணன்	5	1	99-100
26	எப்படிப் பொறுப்பார்	‘குழலன்’	1	6	70
27	எம்மும் தொடாஅல்	மு. வ., டாக்டர்	8	1	80-82
28	ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு	வரதராசன், டாக்டர் மு.	2	4	27-30

வரிசை எண்	கட்டுரைத் தலைப்பு	ஆசிரியர் பெயர்	மலர் எண்	இதழ் எண்	பக்கம் பக்கங்கள்
29	கரிகாற் பெருவளத்தான்	சொக்கப்பா, தி. வை.	1	3	32-33
30	கவிதைக் காதல்	சாமி, எஸ். கே.	2	3	30-32
31	கழாஅத் தலையார்	துரை அரங்கசாமி, மொ. அ.	6	1	43-49
32	காதலனும் கையுறையும்	'குகன்'	,,	10	67
33	காரிகையின் காதல் உள்ளம்	'அறிவடிவன்'	11	2	33-36
34	காற்றும் கலமும்	மகாதேவன், கே. எஸ்.	8	4	2-6
35	குறுந்தொகை—பாட்டு : 40	சோமசுந்தர பாரதியார், நாவலர்	3	7	35-36
36	கொற்கையம் பெருந்துறை முத்து	பொன்னுசாமி, எஸ்.	6	10	2-4
37	சங்க இலக்கியத்தில் சொல்லாக்கம்	மீனாட்சிசுந்தரம், டாக்டர் க.	33	4	49-54
38	சங்க இலக்கிய கற்பனை மரபு	,,	,,	9	9-13
	,,	,,	,,	11	27-34
39	சங்க காலக் கூடல்	இராசமாணிக்கனார், டாக்டர் மா.	15	2	37-43
40	சங்க காலச் சோழர்கள்	சொக்கப்பா, தி. வை.	,,	4	20-24
	,,	,,	,,	5	31-34
	,,	,,	1	6	33-37
41	சங்க காலத்திலும் அதற்கு முற்பட்ட காலத்திலும் தமிழ் நாடக வளர்ச்சி	விசுவநாத ஐயர், ஆர்.	,,	7	20-24
42	சங்க காலப் பாண்டியர்கள்	சொக்கப்பா, தி. வை.	2	6	48-51
	,,	,,	,,	7	25-28
	,,	,,	4	1	13-17
	,,	,,	,,	8	17-21
43	சுடர் துணையாக	மு. வ., டாக்டர்	2	2	9-12
44	சேரர் கால வாழ்வியல்	'அறிவடிவன்'	6	7	11-16
45	சொல்லாதே	மு. வ., டாக்டர்	4	2	42-44

வரிசை எண்	கட்டுரைத் தலைப்பு	ஆசிரியர் பெயர்	மலர் எண்	இதழ் எண்	பக்கம் / பக்கங்கள்
46	சோழ நாட்டுத் துறைகள்	சேதுப்பிள்ளை, ரா. பி.	8	1	52-55
47	தகடூர் அதியமான்கள்	துரைசாமிப் பிள்ளை, ஔவை சு.	12	,,	101-106
48	தமிழ் இலக்கியத்தில் தேசியம்	குருசாமி, ம. ரா. போ.	8	9	46-52
49	தமிழ் இலக்கியத்தில் மனைஇயல்	சக்திவேல், குமாரி நா.	9	11	21-25
50	தமிழ் நாட்டில் யவனர்	வேங்கடசாமி, மயிலை சீனி.	13	2	9-13
51	தமிழ் வழி	குருசாமி, ம. ரா. போ.	12	1	114-122
52	தமிழர் கடவுட் கொள்கை	பாரதி, டாக்டர் ச. சோ.	8	2	14-15
53	தமிழர் கண்ட அரசர்	ஞானசம்பந்தர், அ. ச.	3	4	23-26
54	திருமாவுண்ணி கண்ணகியா ?	வேங்கடசாமி, மயிலை சீனி.	11	9	25-32
55	தேசபக்தி : அன்றும் இன்றும்	சிவஞானம், ம. பொ.	12	2	12-16
56	நற்றிணை	மீனாட்சி சுந்தரனார், தெ. பொ.	13	1	14-16
56அ	நற்றிணை இன்பம்	ஞானமூர்த்தி, டாக்டர் தா. ஏ.			
	1. அரிதே காதலர் பிரிதல்	,,	20	4	40-43
	2. அழாஅதீமோ	,,	21	1	,,
	3. இடியினும் கொடிய இதயம்	,,	19	12	12-16
	4. இவர்யார் என்குவள் அல்லள்	,,	20	5	40-44
	5. உரைக்கல் உய்ந்தனன்	,,	21	,,	40-43
	6. உள்ளினன் அல்லனோ ?	,,	20	2	56-60
	7. எவன் குறித்தனள் கொல் ?	,,	22	6	40-43
	8. எமதி வலவ!	,,	21	9	40-43
	9. ஓம்புமதி	,,	20	,,	41-43
	10. கண்டனென் மகிழ்ந!	,,	22	,,	40-43

வரிசை எண்	கட்டுரைத் தலைப்பு	ஆசிரியர் பெயர்	மலர் எண்	இதழ் எண்	பக்கம் / பக்கங்கள்
(56அ)	11. காமம் கரப்பரிய	ஞானமூர்த்தி, டாக்டர் தா. ஏ.	22	1	40-43
	12. கொடியன்	,,	,,	7	,,
	13. கொண்டுஞ் செல்வர்கொல்?	,,	20	3	,,
	14. நல்குவர்	,,	21	2	,,
	15. நல்லதற்குரியை	,,	,,	4	,,
	16. நன்று செய்தனையே	,,	22	2	,,
	17. நாணும் விட்டேம்	,,	21	3	,,
	18. நின்ற சொல்லர்	,,	19	11	65-70
	19. நெகிழ்ந்தன வளையே	,,	22	5	40-43
	20. பண்பில் செய்தி	,,	,,	3	,,
	21. பல நினைந்து யானும் இனையேன்	,,	,,	10	,,
	22. புலவி உட்கொளல் ஒழிக	,,	20	11	41-44
	23. மடவ மன்ற!	,,	23	3	40-43
	24. மறுகிற் சென்றனள்	,,	21	8	,,
	25. மறுத்தல் வல்லுவம் கொல்லோ?	,,	23	1	,,
	26. மின்னும்	,,	20	6	,,
	27. யாங்கு வல்லுநள்?	,,	22	8	,,
	28. யார் மகளோ?	,,	20	7	,,
	29. வந்தனன்	,,	21	12	,,
	30. வருந்தாது ஏகுக	,	20	8	,,
	31. வருவர்	,	12	6	,,
	32. வாய்ச்சொல் தேறாய்	,,	22	11	,,
	33. வாழாள்	,	21	7	,,

வரிசை எண்	கட்டுரைத் தலைப்பு	ஆசிரியர் பெயர்	மலர் எண்	இதழ் எண்	பக்கம் / பக்கங்கள்
57	நாட்காலைக் கலையாப் பாட்டு?	மீனாட்சி சுந்தரனார், பல்கலைச் செல்வர், தெ. பொ.	6	1	33-40
58	நிலாக் காட்சி	குருசாமி, போ.	2	8	62-67
59	நிறைஇல் நெஞ்சம்	சிவானந்தம், என்.	32	11	13-16
60	படை சேர்த்தான்	ஞானசம்பந்தம், அ. ச.	3	10	41-44
61	பண்டைத் தமிழர் வாழ்வியல்	சொக்கப்பா, தி. வை.	1	1	20-21
62	பண்டைத் தமிழரின் பண்பட்ட உள்ளம்	அரங்கநாயகம், செ.	33	,,	3-4
63	பழங்காலத்தில் இளந்தமிழன்	பெருமாள், ஜி.	,,	4	30-35
64	பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை	மு. வ., டாக்டர் [வரதராசன், டாக்டர் மு.]	7	8	61-68
	,,	,,	,,	9	,,
	,,	,,	,,	10	,,
	,,	,,	,,	11	,,
	,,	,,	,,	12	,,
	,,	,,	8	2	,,
	,,	,,	,,	3	,,
	,,	,,	,,	4	,,
	,,	,,	,,	5	,,
	,,	,,	,,	8	,,
	,,	,,	,,	9	,,
	,,	,,	,,	11	,,
	,,	,,	9	3	61-72
	,,	,,	,,	4	61-68
	,,	,,	,,	6	,,
	,,	,,	,,	7	,,

வரிசை எண்	கட்டுரைத் தலைப்பு	ஆசிரியர் பெயர்	மலர் எண்	இதழ் எண்	பக்கம் / பக்கங்கள்
(64)	பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை	மு. வ., டாக்டர் [வரதராசன், டாக்டர் மு.]	9	10	61-68
	,,	,,	10	1	,,
	,,	,,	,,	2	,,
	,,	,,	,,	5	,,
	,,	,,	,,	8	,,
	,,	,,	,,	10	,,
	,,	,,	,,	12	,,
	,,	,,	11	4	,,
	,,	,,	,,	6	,,
	,,	,,	,,	7	,,
	,,	,,	,,	8	,,
	,,	,,	,,	9	,,
	,,	,,	,,	10	,,
	,,	,,	,,	11	,,
	,,	,,	,,	12	,,
	,,	,,	12	4	,,
65	பழியும் பாவமும்	அண்ணாமலை, சுப.	5	,,	46-49
66	பாண்டியர் நிறுவிய தமிழ்ச் சங்கம்	வேங்கடசாமி, மயிலை சீனி.	11	6	12-17
67	பாலையின் உயிர்ப்பு	'அறிவடிவன்'	7	1	92-96
68	பிரிவரிதாகிய தண்டாக் காமம்	துரை அரங்கசாமி, டாக்டர் மொ. அ.	8	,,	38-45
69	பிரிவு	செயராமன், வெ.	6	4	12-15
70	பு-க-ழ்-வே-ட்-டை	ஞானசம்பந்தம், அ. ச.	7	3	18-21
71	புரட்சி	வரதராசன், டாக்டர் மு.	3	2	43-45

வரிசை எண்	கட்டுரைத் தலைப்பு	ஆசிரியர் பெயர்	மலர் எண்	இதழ் எண்	பக்கம் / பக்கங்கள்
72	பெற்ற பாசம்	அண்ணாமலை, சுப.	5	5	17-21
73	பொன் வளையல்	ஞானசம்பந்தம், அ. ச.	7	1	35-39
74	மகளிரொடு கைபிணைந்து	பொன்னுசாமி, எஸ்.	8	3	7-9
75	மடவன் பாரி	ஞானசம்பந்தம், அ. ச.	7	4	2-6
76	மதுரையில் தமிழ்ச் சங்கம்	இராசமாணிக்கனார், டாக்டர் மா.	13	1	51-57
77	மறத்தற்கரிது	ஞானமூர்த்தி, தா. ஏ.	19	3	16-19
78	முல்லைப் பாட்டு	,,	10	1	108-114
79	வலஞ்சுழியும் தென்புலமும்	மீனாட்சி சுந்தரனார், தெ. பொ.	4	,,	18-23
80	வள்ளுவர் குறளும் சங்க நூல்களும்	சோமசுந்தர பாரதியார், டாக்டர் ச.	8	8	2-4
81	வள்ளைப் பாட்டு	அரசு, க. த. தி.	7	7	16-19
82	வாழ்வது யாரால்?	இருசு, ஆர்.	9	3	5-7
83	வாழ்வின் இயக்கம்	ரத்னம், க.	7	5	38-39
84	வீடு கட்டினான்	ஞானசம்பந்தம், அ. ச.	3	9	9-12
85	வீரமும் ஈரமும்	ஞானமூர்த்தி, தா. ஏ.	2	2	174-178
86	வெட்கங் கெட்டவர்கள்	வரமணி	,,	,,	188
87	5000 ஆண்டுகளுக்கு முன் தமிழர் நாகரிகம்	சொக்கப்பா, தி. வை.	1	10	25-29
	,,	,,	,,	11	24-29

1·3 திருக்குறள்

வரிசை எண்	கட்டுரைத் தலைப்பு	ஆசிரியர் பெயர்	மலர் எண்	இதழ் எண்	பக்கம் / பக்கங்கள்
88	அகலமும் ஆழமும்	வரதராசன், டாக்டர் மு.	1	6	9-13
12	அடியளந்தான்	கிருஷ்ணசாமி நாயுடு, பண்டிதர் அ.	2	3	50-55
89	அல்லல் அருள் ஆள்வார்க்கு இல்லை	நடேச உடையார், க.	7	6	18-18

வரிசை எண்	கட்டுரைத் தலைப்பு	ஆசிரியர் பெயர்	மலர் எண்	இதழ் எண்	பகம் / பக்கங்கள்
90	அறத்தாறு	சித்பவாநந்தர், சுவாமி	5	9	21-25
91	அறநூலும் மறைநூலும்	பார்த்தசாரதி, நா.	7	12	56-58
92	இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் தோன்றிய பொருளியல் நூல்	குன்றக்குடி அடிகளார், தவத்திரு	17	10	122-123
93	இன்றைக்கு வேண்டிய குறள் ஆராய்ச்சி	மீனாட்சிசுந்தரனார், தெ. பொ.	21	11	17-20
94	உலகப் பொதுமறை	,,	,,	,,	2-4
95	உலகை நிலைநிறுத்தும் உத்தமர்	'குகன்'	4	4	67-71
	,,	,,	,,	5	63-65
96	உழவர் மாநாடு	மு. வ., டாக்டர்	9	1	12-14
97	உழைப்பு	தாமோதரன், ஜி. ஆர்.	21	11	11-15
98	உள்ளிருள் நீக்கும் ஒளி	சஞ்சீவி, டாக்டர் ந., கிருட்டிணா சஞ்சீவி, டாக்டர்	33	1	25-28
99	எது அறம்?	முத்துசாமி, மாண்புமிகு மா.	,,	,,	5-10
100	என்றும் புலராது	குருசாமி, போ.	1	7	56-59
101	என்ன விளங்கிற்று	மாணிக்கம், டாக்டர் வ. சுப.	21	11	37-40
102	ஏசுநாதரும் திருக்குறளும்	ஆரோக்கியசாமி, டாக்டர் மு.	17	10	57-61
103	ஏல் எழுத்து	சிவஞானம், என்.	32	5	31
104	ஐயோ பாவம்	தேவராசன், வ.	21	11	81-83
105	ஓர் குறளின் உரை	கிருஷ்ணசாமி நாயுடு, பண்டிதர் அ.	5	,,	42-43
106	,,	,,	6	12	37-40
107	குடிமை	'அறிவடிவன்'	4	10	9-14
108	குறள் மணம்	'குரு'	6	3	66

வரிசை எண்	கட்டுரைத் தலைப்பு	ஆசிரியர் பெயர்	மலர் எண்	இதழ் எண்	பக்கம் பக்கங்கள்
109	குறளில் அறிவியல்	மகாதேதன், கே. எஸ்.	21	2	62-66
110	செப்பமும் எச்சமும்	நடேச உடையார், க.	6	8	6-9
111	செல்வங்கள்	துரையரங்கனார், டாக்டர்	13	1	26-34
112	செழிப்போம் வாரீர்	சுந்தரவடிவேலு, நெ. து.	21	11	21-23
113	டால்ஸ்டாய் குறள் பயின்றவர்	—	1	4	8
3	தத்துவ விளக்கம்	புருஷோத்தம நாயுடு, பி. ஆர்.	9	3	18-22
52	தமிழர் கடவுட் கொள்கை	பாரதி, டாக்டர் ச. சோ.	8	2	14-15
114	தமிழர் கண்ட செல்வம்	ஞானசம்பந்தம், அ. ச.	1	,,	45-48
115	திங்கள் ஒளியில் திருவள்ளுவர்	மகாதேவன், கே. எஸ்.	21	11	61-68
116	திருக்குறள்	சாந்தா, ஆர்.	,,	,,	94-100
117	திருக்குறளும் அதன் உரைகளும்	இராமசாமிக் கவுண்டர், அ.	1	4	43-45
113	திருக்குறளும் ஆரிய வேதங்களும்	,,	,,	6	21-24
119	திருக்குறளும் யாகங்களும்	,,	,,	5	18-21
120	திருவள்ளுவர்	கிருஷ்ணசாமி நாயுடு, பண்டிதர் அ.	4	11	14-18
121	,,	சத்தியமூர்த்தி, து. க.	21	,,	90-93
122	திருவள்ளுவர் கடவுட் கொள்கை	சோமசுந்தர பாரதியார், நாவலர் ச.	2	2	114-116
123	திருவள்ளுவர் காலம் 3200	இராமசாமிக் கவுண்டர், அ.	1	,,	12-16
124	திருவள்ளுவர் பெருவிழா	—	21	1	2-3
125	திருவள்ளுவர் வேண்டுவது குடியாட்சி மன்னவன்	நாயுடு, பண்டிதர் அ. கி.	,,	11	73-77
126	தெரிந்து வினையாடல்	அறிவடிவன்	5	5	25-30
127	தேவரும் வள்ளுவரும்	ஞானமூர்த்தி, வித்துவான்	1	1	44-50

வரிசை எண்	கட்டுரைத் தலைப்பு	ஆசிரியர் பெயர்	மலர் எண்	இதழ் எண்	பக்கம் / பக்கங்கள்
128	நல்ல நூல்	வரதராசன், டாக்டர் மு.	1	1	5-7
129	நிலமென்னும் நல்லாள்	விசுவநாதம், கி. ஆ. பெ.	21	11	78-80
130	பண்புடைய கல்வி	சித்பவானந்தர், சுவாமி.	2	2	24-28
131	பாத்தூண்	ஞானமூர்த்தி, டாக்டர் தா. ஏ.	21	11	49-54
132	புகழொடு தோன்றலின் பொருள் யாது?	துரை அரங்கசாமி, டாக்டர் மொ. அ.	,,	,,	28-36
71	புரட்சி	வரதராசன், டாக்டர் மு.	3	2	43-45
133	பூஞ்சோலையும் திருக்குறளும்	இறைவனடி	4	7	31-35
134	பொதுமை நூல்	வரதராசனார், டாக்டர் மு.	21	11	24-27
8	மானமும் கள்ளும்	துரை அரங்கசாமி, வித்துவான் மொ. அ.	7	2	37-42
135	முதல்குறள் உண்மைப் பொருள்	நாயுடு, பண்டிதர் அ. கி.	23	,,	50-56
136	முப்பாலில் இருதுளிகள்	பரமசிவம், மு.	21	11	84-85
137	வள்ளுவத்தில் அறிவியல்	குன்றக்குடி அடிகளார், தவத்திரு	,,	,,	41-43
138	வள்ளுவர் ஓர் உயிரியல் அறிஞர்	காதர் முகைதீன், இ.	29	2	45-46
139	வள்ளுவர் கண்ட அறம்	முருகன், ப.	21	11	55-60
80	வள்ளுவர் குறளும் சங்க நூல்களும்	சோமசுந்தர பாரதியார், டாக்டர் ச.	8	8	2-4
140	வள்ளுவர் வகுத்த அரசு	பரமசிவானந்தம், அ. மு.	21	11	44-48
141	வள்ளுவர் வழங்கும் அறம்	கலாமணி, சு.	,,	,,	86-89
142	வள்ளுவர் வழியில்	கருணாநிதி, மாண்புமிகு மு.	23	2	2-5
143	வள்ளுவரும் தற்கொலையும்	இரத்தினம், கா. பொ.	12	1	74-76
144	வாமனக்குறள்	குருசாமி, போ.	5	3	22-24
145	ஜர்மானியர் கண்ட வள்ளுவர்	மீனாட்சிசுந்தரனார், தெ. பொ.	1	10	2-5

1.4 பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் (திருக்குறள் தவிர)

வரிசை எண்	கட்டுரைத் தலைப்பு	ஆசிரியர் பெயர்	மலர் எண்	இதழ் எண்	பக்கம் / பக்கங்கள்
91	அறநூலும் முறைநூலும்	பார்த்தசாரதி, நா.	7	12	56-58
146	என்னாதி என்பாருமில்	கோவிந்தசாமி, பி. எஸ். ஜி. ஜி.	9	7	5-6
147	கொல்லர் தெருவில் ஊசி விற்றல்	,,	,,	4	2-3
148	யாம் ஆ பிரிவதிலம்	,,	,,	10	32
149	வாழ்தியோ மற்றோ உயிர் ?	,,	,,	9	31-32

1.5 சிலப்பதிகாரம்

வரிசை எண்	கட்டுரைத் தலைப்பு	ஆசிரியர் பெயர்	மலர் எண்	இதழ் எண்	பக்கம் / பக்கங்கள்
150	அடிகளின் அறநெஞ்சம்	வரதராசனார், டாக்டர் மு.	12	9	52-56
151	ஆய்ச்சியர் குரவை	ரகுநாயகன்	1	2	21-24
152	இளங்கோவடிகளின் சமயம்	சண்முகம், மு.	6	,,	15-22
153	உண்மைப் பொருள்	வேங்கடசாமி, மயிலை சீனி.	11	10	41-45
154	ஒரு புதிய கோணப் பார்வை	ஞானசம்பந்தம், அ. ச.	21	11	115-119
155	காப்பியக் கதையே கவிஞர் கதை	மீனாட்சி சுந்தரனார், பல்கலைச் செல்வர், தெ. பொ.	15	1	17-21
156	குடிமக்கள் காப்பியம்	மீனாட்சி சுந்தரனார், தெ. பொ.	3	2	25-27
157	கோவலன் கனவு	சண்முகம், மு.	7	3	2-8
	,,	சண்முகம், மு. அ.	,,	4	15-19
158	சிலப்பதிகாரக் கடவுள் வாழ்த்து	அண்ணாமலை, சுப.	15	10	37-43
159	சிலப்பதிகாரச் செய்யுள்	குருசாமி, போ.	3	6	43-50
	,,	,,	,,	7	69-72
	,,	,,	,,	8	44-48

வரிசை எண்	கட்டுரைத் தலைப்பு	ஆசிரியர் பெயர்	மலர் எண்	இதழ் எண்	பக்கம் / பக்கங்கள்
(159)	சிலப்பதிகாரச் செய்புள்	குருசாமி, போ.	3	10	2-8
	,,	,,	,,	11	4-8
	,,	,,	4	4	41-47
	,,	,,	,,	9	9-17
160	சிலப்பதிகாரமும் பங்களரும்	வேங்கடசாமி, மயிலை சீனி.	11	8	6-9
161	சிலம்பிசை	குப்புசாமி, எஸ். ஆர்.	4	,,	45-50
162	சிலம்பில் ஊடல்	சிவஞானம், ம. பொ.	8	1	73-77
54	திருமாவுண்ணி கண்ணகியா ?	வேங்கடசாமி, மயிலை சீனி.	11	9	25-32
163	துறவு தந்த காப்பியம்	சண்முகம், மு.	7	8	22-26
164	நாடகப் பண்புகள்-ஊர்சூழ்வரி	தட்சிணாமூர்த்தி, வை.	11	7	24-29
165	பத்தினிக் கோட்டம்	கோவிந்தராசனார், வித்துவான் சி.	17	2	64-68
	,,	,,	,,	3	20-26
166	பத்தினி வணக்கம்	இராகவையங்கார், மு.	8	1	11-16
167	பதிகமும் காவியமும்	குருசாமி, போ.	7	,,	72-78
168	பெற்றவள் இதயம்	கிருஷ்ணா, திருமதி	6	6	25-29
169	போலிப் புலமையின் காலிக் கதைகள்	சோமசுந்தர பாரதியார், நாவலர்	3	2	52-54
170	முடித்தலை நெரித்த பாட்டு	நல்லினி	2	,,	133-134
171	வழிகாட்டும் காப்பியம்	வரதராசன், டாக்டர் மு.	3	5	16-20
172	விலைமகளா ? கலைமகளா ?	ஞானமூர்த்தி, வித்துவான் தா. ஏ.	1	8	34-35

1.6 மணிமேகலை

வரிசை எண்	கட்டுரைத் தலைப்பு	ஆசிரியர் பெயர்	மலர் எண்	இதழ் எண்	பக்கம் / பக்கங்கள்
2	ஞனமா ? அனமா ?	முத்துச் சண்முகம்	13	11	37-40
168	பெற்றவள் இதயம்	கிருஷ்ணா, திருமதி	6	6	25-29
169	போலிப் புலமையின் காலிக் கதைகள்	சோமசுந்தர பாரதியார், நாவலர்	3	2	52-54
173	மணிமேகலை உள்ளம்	சிவானந்தவல்லி, கை.	9	10	20-25
174	மணிமேகலையில் இயற்கை இகந்த நிகழ்ச்சிகள்	'அறிவடிவன்'	7	11	2-7

1.7 சீவக சிந்தாமணி

வரிசை எண்	கட்டுரைத் தலைப்பு	ஆசிரியர் பெயர்	மலர் எண்	இதழ் எண்	பக்கம் / பக்கங்கள்
175	சீவக சிந்தாமணி	ஞானமூர்த்தி, தா. ஏ.			
	1. சீவக சிந்தாமணி	,,	8	5	51-55
	2 கற்பகச் சோலை	,,	,,	6	25-31
	3. மன்னன் மாளிகை	,,	,,	7	29-32
	4. இன்பக்கனி	,,	,,	11	2-7
	5. வேந்தன் வீழ்ச்சி	,,	9	4	48-55
	6. அவல வீரன்	,,	,,	5	56-60
	7. திருமகன் தோற்றம்	,,	,,	7	46-50
	8. தேவியின் துறவு	,,	,,	9	6-10
	9. நாமகள் மருவிய நம்பி	,,	,,	10	47-52
	10. வள்ளலின் அருட்செயல்	,,	10	2	49-54
	11. வீரனின் வெற்றிப் பரிசு	,,	,,	3	45-49
	12. கலம் ஊர்ந்த காளை	,,	,,	4	55-58

வரிசை எண்	கட்டுரைத் தலைப்பு	ஆசிரியர் பெயர்	மலர் எண்	இதழ் எண்	பக்கம் / பக்கங்கள்
(175)	13. துன்பத்தின் விளைவு	ஞானமூர்த்தி, தா. ஏ.	,,	6	55-60
	14. இசை மண்டபம்	,,	,,	8	43-47
	15. யாழ்ப் போட்டி	,,	,,	10	52-59
	16. நம்பியின் இசை வென்றி	,,	10	11	54-59
	17. விடலையின் வெம்போர்	,,	,,	12	,,
	18. வீரனின் திருமணம்	,,	12	9	51-55
	19. செல்வியின் சீற்றம்	,,	,,	10	54-59
	20. கருணை மறவன்	,,	,,	11	53-58
	21. கிள்ளைத் தூது	,,	,,	12	55-61
	22. கன்னியின் காதல் உள்ளம்	,,	13	3	10-15
	23. சிறைபட்ட செல்வன்	,,	,,	4	63-68
	24. நண்பனின் உதவி	,,	,,	5	9-14
	25. வழியனுப்புதல்	,,	,,	6	64-67
	26. நங்கையின் நடனம்	,,	,,	8	53-60
	27. விடர்தீர்ந்த விடலை	,,	,,	10	8-16
	28. பாவையின் புலம்பல்	,,	,,	11	45-52
	29. துறவிகளுக்கு அறவுரை	,,	,,	12	7-12
	30. நங்கையின் நல்வினை	,,	14	1	57-63
	31. திருமகளின் அருட்பெருக்கு	,,	,,	2	7-13
	32. காதலனைக் கைவிட்ட காரிகை	,,	,,	3	9-16
	33. வில்லுடைக் கடவுள்	,,	,,	4	10-16
	34. ஆசிரியருக்கு அன்பளிப்பு	,,	,,	5	8-15

வரிசை எண்	கட்டுரைத் தலைப்பு	ஆசிரியர் பெயர்	மலர் எண்	இதழ் எண்	பக்கம் / பக்கங்கள்
(175)	35. தம்பியும் நம்பியும்	ஞானமூர்த்தி, தா. ஏ.	14	6	7-13
	36. தோழர்கள் சந்திப்பு	,,	,,	8	8-14
	37. பொய்ப் போர்	,,	,,	9	55-61
	38. தாயும் மகனும்	,,	,,	10	8-16
	39. அன்னையின் அறிவுரை	,,	,,	11	8-15
	40. நம்பியின் சபதம்	,,	,,	12	8-14
	41. சபதம் நிறைவேறுதல்	,,	15	2	17-24
	42. விதயநாடு அடைதல்	(ஞானமூர்த்தி, டாக்டர் தா. ஏ.)	,,	3	13-16
	43. போருக்குப் புறப்படல்	,,	,,	4	8-13
	44. போர்	,,	,,	5	4-9
	45. ,,	,,	,,	6	10-16
	46. வஞ்சகனின் வீழ்ச்சி	,,	,,	7	12-16
	47. அரசேற்றல்	,,	,,	8	8-14
176	தேவர் கண்ட திருநாடு	ஞானமூர்த்தி, தா. ஏ.	8	4	42-46
177	தேவரின் ஓர் அரிய படைப்பு	'அறிவடிவன்'	4	5	2-8
127	தேவரும் வள்ளுவரும்	ஞானமூர்த்தி, வித்துவான்	1	1	44-50

1.8 கம்பராமாயணம்

178	அனுமன் எடுத்த மலை	மகாதேவன், கே. எஸ்.	10	8	48-51
179	எது சிறந்து நின்றது	'இருசு'	32	4	57-61
180	ஒரு பாட்டுடையான்	ஞானசம்பந்தம், அ. ச.	13	1	102-104

வரிசை எண்	கட்டுரைத் தலைப்பு	ஆசிரியர் பெயர்	மலர் எண்	இதழ் எண்	பக்கம் / பக்கங்கள்
181	கம்பர் கண்ட அறம்	ஞானசம்பந்தம், அ. ச.	11	1	106-109
182	கம்பராமாயணப் பதிப்பு	சுப்பிரமணிய பிள்ளை, ஜி.	7	,,	53-58
183	கம்பருடன் ஒரு நாள்	ஞானமூர்த்தி, தா. ஏ.	3	2	109-114
184	கம்பன் புளுகும் வால்மீகி வாய்மையும்	மாணிக்க நாயக்கர், பா. வே.	,,	9	32-36
	,,	,,	,,	10	58-60
	,,	,,	,,	11	59-61
	,,	,,	,,	12	49-54
185	கம்பன் வழக்கறிஞன்	ஞானசம்பந்தம், அ. ச.	2	2	80-86
186	காதலும் கடமையும்	,,	8	4	7-14
187	செய்தற்கு அடுப்பதே ஆகும்	வரதராஜுலு நாயுடு, நா.	24	10	64-67
188	நாடக மயில்	,,	25	2	37-42
189	போட்டு	ஜகந்நாதன், கி. வா.	27	11	112-114
190	மாய வேடம்	சுப்பிரமணியம், ஜி.	17	10	74-76
191	சூரிய தேர்வலான்	ஞானசம்பந்தம், அ. ச.	8	3	45-51
192	வாலியின் வற்றாத அன்பு	ஆலால சுந்தரனார், பூ.	17	10	81-83

1.9 இடைக்கால / தற்கால இலக்கியங்கள் (1.4, 1.8 தவிர)

வரிசை எண்	கட்டுரைத் தலைப்பு	ஆசிரியர் பெயர்	மலர் எண்	இதழ் எண்	பக்கம் / பக்கங்கள்
11	அடிசிற்கினியாள்	ஞானமூர்த்தி, தா. ஏ.	9	11	92-93
193	அப்பரைப் பற்றிய ஒரு ஆய்வுரை	நடராஜப்பிள்ளை, இராவ் சாகிப் தி. சு.	10	9	28-30
17	ஆவண ஓலை	ஜகந்நாதன், கி. வா.	,,	1	89-93
20	இலக்கியம் வளர்த்த மகளிர்	இராசராசேசுவரி, பு. பா.	27	11	97-106

வரிசை எண்	கட்டுரைத் தலைப்பு	ஆசிரியர் பெயர்	மலர் எண்	இதழ் எண்	பக்கம் பக்கங்கள்
194	எங்கள் பாவம்	ஜகந்நாதன், கி. வா.	4	2	99-102
195	எண்சுவடியா? பாட்டா?	மீனாட்சி சுந்தரனார், தெ. பொ.	,,	,,	53-58
196	எண்ணுக நல்லன	'இருசு'	33	5	2-7
103	எரல் எழுத்து	சிவஞானம், என்.	32	,,	31
197	உரிமை வாழ்வு	'ஆஅவல்'	2	2	157-159
198	ஊமையின் சாதனை	சரோஜினிதேவி, ந.	5	10	43-51
199	ஔவையார் கண்ட ஆதாரக் கல்வி	'இளங்கணத்தான்'	,,	7	35-40
200	கங்கை பிறந்தாள் கல்விலே	பாஸ்கர தொண்டைமான், தொ. மு.	1	3	15-18
201	கண்ணனும் களிறும்	பரமசிவானந்தம், அ. மு.	17	10	68-71
202	காராமணி	பொன்னுசாமி, செ.	7	8	18-20
203	கீரை நாகரிகம்	நெல்லையப்பன், கு.	2	2	57-65
108	குறள் மணம்	'குரு'	6	3	66
204	கூவநூல்—ஓர் அறிமுகம்	சுப்பிரமணியம், ச. வே.	33	1	17-23
205	கைவண்ணம்	'ஆஅவல்'	3	2	97-99
206	சீவக சிந்தாமணி அம்மானை	சுப்பிரமணியப்பிள்ளை, ஐ. & கிருஷ்ணபிள்ளை, வித்துவான்	4	6	48-53
207	தருமர் சால்பு	சோமசுந்தர பாரதியார், ச.	7	1	19-21
208	தருமர் சால்பு—மறுப்புக்கு மறுமொழி	சோமசுந்தர பாரதியார், டாக்டர்	,,	5	15-16
117	திருக்குறளும் அதன் உரைகளும்	இராமசாமிக் கவுண்டர், அ.	1	4	43-45
118	திருக்குறளும் ஆரிய வேதங்களும்	,,	,,	6	21-24
119	திருக்குறளும் யாகங்களும்	,,	,,	5	18-21
209	திருமூலர் யோக நெறி	வேதாத்திரி மகரிஷி, யோகிராஜ்	33	3	27-31

வரிசை எண்	கட்டுரைத் தலைப்பு	ஆசிரியர் பெயர்	மலர் எண்	இதழ் எண்	பக்கம் / பக்கங்கள்
210	திருவாசகத்தில் விஞ்ஞானம்	ஞானசம்பந்தம், அ. ச.	6	1	17-22
211	தூது	குருசாமி, போ.	5	4	60-64
212	தேம்பாவணியும் திருப்பாலகனும்	சவரிமுத்து, அ.	18	2	28-32
213	நண்டும் கண்டும்	ஜகந்நாதன், கி. வா.	13	1	111-114
214	நம்மாழ்வார் காட்டிய நல்ல நெறி	'இருசு'	33	,,	29-31
215	நிகண்டுகள்	ஞானமூர்த்தி, தா. ஏ.	13	9	61-68
130	பண்புடைய கல்வி	சித்பவானந்தர், சுவாமி	2	2	24-28
215அ	பராபரக் கண்ணி—ஓர் அருளியல் ஆய்வு	மோகன், இரா.	24	,,	64-68
216	பிறந்தது எப்படியோ ?	மீனாட்சி சுந்தரனார், தெ. பொ.	2	8	9-13
217	புலவர் பேச்சு	கந்தசாமிப்பிள்ளை, அ.	5	9	12-14
218	பெரிய புராணம் ஓர் உலக நூல்	பாலசுப்பிரமணிய ஐயர், கே.	17	10	41-44
219	பெரியாழ்வார் சொற்சித்திரம்	தேசிகன், ரா. ஸ்ரீ.	13	1	21-25
220	மதுரகவிராயர்	பொன்னுசாமி, எஸ்.	4	7	67-71
221	மருத்துவக் கலையில் இலக்கியத் தமிழ்	விஸ்வலிங்கம், வி. க.	31	6	68-70
222	மறைந்து போன ஒரு காவியம்	வையாபுரிப்பிள்ளை, எஸ்.	2	2	38-43
223	மறைந்து போன திருவாசகம்	மீனாட்சி சுந்தரனார், தெ. பொ.	,,	4	7-8
81	வள்ளைப் பாட்டு	அரசு, க. த. தி.	7	7	16-19
86	வெட்கங் கெட்டவர்கள்	வரமணி	2	2	188

1.10 தற்கால இலக்கியம்

வரிசை எண்	கட்டுரைத் தலைப்பு	ஆசிரியர் பெயர்	மலர் எண்	இதழ் எண்	பக்கம் / பக்கங்கள்
224	அன்றாட வாழ்வில் இலக்கியம்	சஞ்சீவி, ந.	10	1	50-56
225	இந்திய மொழிகளில் தமிழ்மணம்	மீனாட்சி சுந்தரனார், தெ. பொ.	12	,,	16-19
226	உலகப் பொதுவுடைமை	இரத்தினம், கா. பொ.	10	,,	115-117
227	உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்	வேங்கடராமன், அ.	33	12	17-19
228	கண்ணன் பாட்டு	தமிழண்ணல், டாக்டர்	,,	,,	107-114
229	கண்ணதாசனின் பாடல்களில் சக்திதாசனின் தாக்கம்	தமிழ்ப்பித்தன், புலவர்	,,	,,	76-81
230	குயில் பாட்டு	சேசையய்யா, மா.	14	3	61-65
	,,	,,	,,	4	37-41
	,,	,,	,,	5	29-32
231	குழந்தை இலக்கியம்	சஞ்சீவி, ந.	12	1	61-65
48	தமிழ் இலக்கியத்தில் தேசியம்	குருசாமி, ம. ரா. போ.	8	9	46-52
232	தமிழ்க் கவிதையின் எதிர்காலம்	முத்துசிவன், அ.	1	1	55-60
	,,	,,	,,	2	23-29
233	தற்கால இலக்கியங்கள்	ஞானமூர்த்தி, தா. ஏ.	12	3	9-16
234	தாகூரும் தமிழிலக்கியங்களும்	சிதம்பரநாதன், டாக்டர் அ.	,,	,,	81-86
55	தேசபக்தி : அன்றும் இன்றும்	சிவஞானம், ம. பொ.	,,	2	12-16
235	தேசியக்கவியின் தமிழ்க்காதல்	சஞ்சீவி, ந.	9	,,	12-15
	,,	,,	,,	3	26-32
236	தேசியப் பாடல்	தூரன், பெ.	,,	8	42-44
237	பாரதி—ஒரு முன்னுணர் ஞானி	தாமோதரன், ஜி. ஆர்.	33	12	13-15

வரிசை எண்	கட்டுரைத் தலைப்பு	ஆசிரியர் பெயர்	மலர் எண்	இதழ் எண்	பக்கம் / பக்கங்கள்
238	பாரதிக்கு அஞ்சலி	நாகராஜன், கே. எஸ்.	33	12	82-83
239	பாரதியார் கவிதை நடை	குருசாமி, ம. ரா. போ.	,,	,,	41-47
240	பாரதியாரின் பெருமிதப் பண்புகள்	கிருஷ்ணமூர்த்தி, போ. ரா.	,,	,,	127-130
241	பாரதியாரின் மறுமலர்ச்சி எண்ணங்கள்	இளந்திரையன், முனைவர் சாலை	,,	,,	49-54
242	பாரதியாரும் இளைஞரும்	சிட்டிபாபு, சை. வே.	,,	,,	20-27
243	பாரதியின் எழுத்து—தேசிய கீதங்கள்	அரியநாயகம், செ.	34	4	17-20
244	பாரதியின் காதலி	மீனாட்சிசுந்தரனார், டாக்டர் கா.	33	12	137-142
245	பாரதியின் தொழிலாளர்	இருசப்பிள்ளை, எஸ்.	,,	,,	95-100
246	பாரதியின் தொழிற்புரட்சி	பார்த்தசாரதி, நா.	,,	,,	66-69
247	பாரதியின் நாட்டுப்பற்று	சஞ்சீவி, டாக்டர் ந.	34	1	17-23
248	பாரதியும் அறிவியலும்	முஸ்தபா, மணவை.	33	12	123-126
249	பாரதியும் தாகூரும்	லலிதா காமேசுவரன், டாக்டர்	,,	,,	132-136
250	மகளிரும் நாடகத் துறையும்	சந்திரகாந்தா,	27	11	43-47
251	மகாகவி	பெரியசாமித் தூரன், ம. ப.	33	12	65
252	மகாகவி பாரதி-புது யுகத்தின் தலைவாயில்	வீரப்பன், இராம.	,,	,,	8-11
253	விடுதலை இயக்கமும் பாட்டும்	நாமக்கல் கவிஞர்	9	8	53-62
254	விடுதலைக்குப் பின் தமிழ் இலக்கிய வளர்ச்சி	மீனாட்சிசுந்தரனார், டாக்டர் தெ. பொ.	24	,,	81-91
255	விடுதலையும் இலக்கியமும்	,,	9	,,	102-104
256	வெளிநாட்டார் கண்ணோக்கில் பாரதியார்	மோகனராசு, டாக்டர் கு.	33	12	115-122

1.11 இலக்கிய ஒப்பீடு

வரிசை எண்	கட்டுரைத் தலைப்பு	ஆசிரியர் பெயர்	மலர் எண்	இதழ் எண்	பக்கம் / பக்கங்கள்
91	அறநூலும் முறைநூலும்	பார்த்தசாரதி, நா.	7	12	56-58
257	இந்திய மொழிகளில் தமிழ்மணம்	மீனாட்சி சுந்தரனார், தெ. பொ.	12	1	16-19
102	ஏசுநாதரும் திருக்குறளும்	ஆரோக்கியசாமி, டாக்டர் மு.	17	10	57-61
229	கண்ணதாசனின் பாடல்களில் சக்திதாசனின் தாக்கம்	தமிழ்ப்பித்தன், புலவர்	33	12	76-81
184	கம்பன் புளுகும் வால்மீகி வாய்மையும்	மாணிக்கம் நாயக்கர், பா. வே.	3	9	32-36
	,,	,,	,,	10	58-56
	,,	,,	,,	11	59-61
	,,	,,	,,	12	49-54
108	குறள் மணம்	‘குரு’	6	3	66
254	தாகூரும் தமிழிலக்கியங்களும்	சிதம்பரநாதன், டாக்டர் அ.	12	,,	81-86
117	திருக்குறளும் அதன் உரைகளும்	இராமசாமிக் கவுண்டர், அ.	1	4	43-45
118	திருக்குறளும் ஆரிய வேதங்களும்	,,	,,	6	21-24
119	திருக்குறளும் யாகங்களும்	,,	,,	5	18-21
123	திருவள்ளுவர் காலம்	,,	,,	2	12-16
55	தேசபக்தி: அன்றும் இன்றும்	சிவஞானம், ம. பொ.	12	,,	,,
127	தேவரும் வள்ளுவரும்	ஞானமூர்த்தி, தா. ஏ.	1	1	44-50
163	பதிகமும் காவியமும்	குருசாமி, போ.	7	,,	72-78
258	பழமையே புதுமை	மீனாட்சி சுந்தரனார், தெ. பொ.	8	,,	17-20
249	பாரதியும் தாகூரும்	லலிதா காமேசுவரன், டாக்டர்,	33	12	132-136
133	பூஞ்சோலையும் திருக்குறளும்	இறைவனடி	4	7	31-35
168	பெற்றவள் இதயம்	கிருஷ்ணா, திருமதி	6	6	25-29

வரிசை எண்	கட்டுரைத் தலைப்பு	ஆசிரியர் பெயர்	மலர் எண்	இதழ் எண்	பக்கம் / பக்கங்கள்
169	போலிப் புலமையின் காலிக் கதைகள்	சோமசுந்தர பாரதியார், நாவலர்	3	2	52-54
80	வள்ளுவர் குறளும் சங்க நூல்களும்	,, (டாக்டர் ச.)	8	8	2-4

1.12 நாட்டுப்புற இலக்கியம்

வரிசை எண்	கட்டுரைத் தலைப்பு	ஆசிரியர் பெயர்	மலர் எண்	இதழ் எண்	பக்கம் / பக்கங்கள்
259	உரம் பற்றிய பழமொழிகள்	சண்முகசுந்தரம், வி. எஸ்., புருஷோத்தமன், எஸ்., ஜெகந்நாதன், என். டி.	21	7	52-55
260	கதைப்பாட்டு	வையாபுரிப் பிள்ளை	1	2	4-6
261	காதலுக்குக் கண்ணில்லை	முருகன், ப.	11	11	17-20
262	நாய் காணின் கல் காணார்	,,	9	6	10-14
263	பட்டால் தெரியும்	'இளங்கணத்தான்'	7	2	16-20

1.13 தமிழிலக்கிய/ஆராய்ச்சி வரலாறு

வரிசை எண்	கட்டுரைத் தலைப்பு	ஆசிரியர் பெயர்	மலர் எண்	இதழ் எண்	பக்கம் / பக்கங்கள்
24	உலக அரங்கில் தமிழ் ஆராய்ச்சி	கெல்லர், கார்ல் ஏ.	18	7	10-13
	,,	,,	,,	8	9-11
	,,	,,	,,	9	49-52
264	கலைக்கதிர் வளர்த்த தமிழாய்வு	மோகனராசு, டாக்டர் கு.	33	1	33-43
41	சங்க காலத்திலும் அதற்கு முற்பட்ட காலத்திலும் தமிழ் நாடக வளர்ச்சி	விசுவநாதஐயர், ஆர்.	1	7	20-24
264அ	சமணர்களின் தொண்டு	இருசுப்பிள்ளை, ஆர்.	31	4	17-21
264ஆ	சமயங்கள் வளர்த்த தமிழ்	வேங்கடசாமி, மயிலை சீனி.	10	1	22-28

வரிசை எண்	கட்டுரைத் தலைப்பு	ஆசிரியர் பெயர்	மலர் எண்	இதழ் எண்	பக்கம் / பக்கங்கள்
265	தமிழ் வளர்ந்திருக்கிறதா?	ஞானசம்பந்தம், அ. ச.	10	1	60-64
266	,,	மீனாட்சிசுந்தரனார், தெ. பொ.	,,	,,	8-11
233	தற்கால இலக்கியங்கள்	ஞானமூர்த்தி, தா. ஏ.	12	3	9-16
267	தென்னாட்டு மொழி வளர்ச்சியில் பிரிட்டிஷாரின் பங்கு	ஜான்மார்	9	4	25-29
215	சிகண்டுகள்	ஞானமூர்த்தி, தா. ஏ.	13	9	61-68
268	புதுமை இலக்கியத்தில் பொருப்புணர்ச்சி	பார்த்தசாரதி, நா.	11	2	2-5
269	வரலாற்று நூல்கள்	ஞானமூர்த்தி, தா. ஏ.	16	10	26-32
254	விடுதலைக்குப் பின் தமிழ் இலக்கிய வளர்ச்சி	மீனாட்சிசுந்தரனார், டாக்டர் தெ. பொ.	24	8	81-91

2. உலகத்தமிழ் மாநாடுகள்

வரிசை எண்	கட்டுரைத் தலைப்பு	ஆசிரியர் பெயர்	மலர் எண்	இதழ் எண்	பக்கம் / பக்கங்கள்
270	இரண்டாவது உலகத்தமிழ் மாநாடு கருத்தரங்கு தொடக்கவுரை	சாகிர் உசேன், டாக்டர்	20	3	2-11
271	உலக அரங்கில் தமிழ் ஆராய்ச்சி	ஞானமூர்த்தி, டாக்டர் தா. ஏ.	18	6	57-66
272	ஐந்தாவது உலகத்தமிழ் மாநாடு	முருகன், ப.	33	1	13-16
272அ	,,	—	,,	2	3-17
